டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 13.03.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 24 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 219 - Madurai | Online Edition

# தமிழகத்தில் மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, மார்ச் 12

தமிழகத்தில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பூமத்திய ரேகையை ஒட்டிய மேற்கு இந்திய பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய மாலத்தீவு பகுதிகளிலிருந்து தமிழக கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. குமரிக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, இன்று (13) முதல் 15-3-25 வரையிலான



நாட்களில், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

16-3-25ல் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

17 மற்றும் 18-3-25ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவித்துள்ளது.




## தென்னையில் வெள்ளை ஈ குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய தோட்டக்கலை கல்லூரி மாணவிகள்

திண்டுக்கல், மார்ச் 12

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் நெய்காரபட்டி அருகே இரவிமங்கலம் கிராமத்தில், மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டம் (SSEPERS), வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA), தோட்டக்கலை உதவி இயக்குனர் முன்னிலையில் நடைபெற்றது. செல்வம் என்பவர் தங்களது இயற்கை விவசாயம் குறித்து சிறப்புரை ஆற்றினார்.

மேலும்,தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளத்தை சேர்ந்த மாணவர்கள் ஊரகத் தங்கல் மற்றும் தோட்டக்கலை பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பழனி குழுவை சேர்ந்த பூஜா.இ, பிரபா.க, பிரின்சி சில்வியா.பா, பிரித்திகா.வா, பிரியதர்ஷினி.மு, ரித்திகா.ச, ரூபஹரிணி.ஈ, சன்மிதா.தே.நா, செண்பகபிரியா.ரா, சிநேகா.சு ஆகியோரும் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தென்னையில் வெள்ளை ஈ குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# ரூ.10 இலட்சம் மதிப்புடைய விதைகள் விற்பனைக்கு தடை



சேலம், மார்ச் 12

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள தனியார் மற்றும் அரசு விதை விற்பனை நிலையங்களை விழுப்புரம் மண்டல விதை ஆய்வு துணை இயக்குநர் சரவணன் தலைமையில் 4 விதை ஆய்வாளர்கள் கொண்ட சிறப்பு குழுவினர் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். சென்னை விதை சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை இயக்குநரின் உத்தரவின்படி காய்கறி மற்றும் பழவகை பயிர் விதைகளின் தரத்தை உறுதி செய்யும் பொருட்டு இந்த திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில் உரிய ஆவணங்கள் இல்லாத ரூ.10 இலட்சம் மதிப்புடைய விதைகளுக்கு விதை விற்பனை தடை விதிக்கப்பட்டது.

ஆய்வின் போது விதை விற்பனை நிலையங்களின் விதை விற்பனை உரிமம், விதை இருப்பு பதிவேடு, விதை கொள்முதல் ஆவணம் மற்றும் இதர விதை விற்பனை ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது.

ஆய்வின் முடிவில் அனைத்து விதை விற்பனை நிலையங்களிலும் விதை இருப்பு மற்றும் விலைப் பட்டியல் விவசாயிகள் பார்வைக்கு தெரியும்படி காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அனைத்து விதை விற்பனைக்கும் தவறாமல் விவசாயிகளுக்கு ரசீது வழங்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்கள். இதனை மீறுபவர்கள் மீது தக்க சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரித்தனர்.

இந்த ஆய்வில் சேலம், விதை ஆய்வு துணை இயக்குநர் சித்ரா தலைமையில் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட விதை ஆய்வாளர்கள் உடனிருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தென்னையை தாக்கும் பூச்சிகள் மற்றும் அதனைத் தடுக்கும் முறைகள் பற்றி அறிந்து கொண்ட வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள்



கோயம்புத்தூர், மார்ச் 12

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் குமரகுரு வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், அவர்களின் இறுதி ஆண்டு பாடத்தில் மேற்கொள்ளும் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி திட்டத்தை மேற்கொள்ள (Student READY Programme) அன்னூர் வட்டாரத்தைச் சேர்ந்த குப்பே பாளையம் பண்ணைப்பள்ளியில் மார்ச் 6 அன்று வேளாண்மை விரிவாக்க துணை இயக்கம் (SMAE), வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (ATMA), விரிவாக்க சீரமைப்பு திட்டம் (SSEPERS) நடத்திய பயிற்சி முகாமில் பங்கேற்று தட்டை பயறு மற்றும் தென்னையை தாக்கும் பூச்சிகள் மற்றும் அதனைத் தடுக்கும் முறைகள் பற்றி தெரிந்து கொண்டனர்.




இதைப் பற்றி விரிவாக Dr.துரைசாமி (கிருஷி விக்யான் கேந்திரா (KVK) மற்றும் ராஜன் (DDA) கூறினார்கள். மேலும், தட்டை பயற்றில் வரும் செம்பேன்,தென்னையைத் தாக்கும் காண்டாமிருக வண்டு மற்றும் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் தடுப்பு முறைகள் பற்றியும் கற்றுக் கொண்டனர். மாணவர்கள் மட்டுமின்றி விவசாயிகள் பலரும் இப்பயிற்சியில் பங்கேற்றனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 12.03.2025 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 16 | 20 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 16 | 20 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 22 | 28 | 57A | உருளை(ஊட்டி) | 20 | 42 |
| 2 | வெண்டை | 34 | 38 | 58 | மேரக்காய் | 15 | 20 |
| 3 | தக்காளி (நாடு) | 10 | 13 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 25 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 10 | 14 | 60 | கேரட் | 50 | 55 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 34 | 38 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 50 | 58 |
| 6 | புடலை | 20 | 26 | 62 | நூல்கோல் | 24 | 28 |
| 7 | பீர்க்கன் | 30 | 36 | 63 | டர்னிப் | 40 | 48 |
| 8 | சுரைக்காய் | 12 | 16 | 64 | மு.கோஸ் | 14 | 18 |
| 9 | பாகற்காய் | 25 | 30 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 30 | 35 | 66 | காளிபிளவர் | 25 | 28 |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 70 | 74 |
| 12 | அரசாணி | 12 | 15 | 68 | பூண்டு | 80 | 100 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 20 | 26 | 69 | இஞ்சி | 40 | 50 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 20 | 26 | 70 | புருக்கோலின் | 90 | 100 |
| 15 | சி.வெங்காயம் | 30 | 36 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 68 |
| 16 | பெ.வெங்காயம் | 24 | 28 | 72 | குடமிளகாய் | 40 | 46 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 24 | 73 | ஊட்டி அவரை | 100 | 110 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 54 | | | | |
| 19 | முருங்கை | 55 | 60 | | | | |
| 20 | தேங்காய் | 58 | 62 | | | | |
| 21 | மாங்காய் | 55 | 85 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 48 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 58 | 62 | 75 | எலுமிச்சை | 70 | 80 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 30 | 38 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 76 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 120 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 80 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 58 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 18 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 60 | 70 |
| 40 | கோவக்காய் | 28 | 32 | 91 | பூவன் | 40 | 45 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 58 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 40 | 45 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 16 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 28 | 96 | நேந்திரன் | 60 | 64 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 14 | 18 | 97 | செவ்வாழை | 80 | 90 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 20 | 24 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 55 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 28 | 102 | நெல்லிக்காய் | 60 | 70 |
| 52 | புளி | 135 | 145 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கார்ன் | 32 | 36 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 16 | 20 | | | | |

# வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு பயிற்சி



இராமநாதபுரம், மார்ச் 12

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, நம்மாழ்வார் வேளாண்மை கல்லூரியில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்கள் கீழ பார்த்திபனூர் கிராமத்து விவசாயி களுக்கு பயிற்சி அளித்தனர். நெல்லில் விதை நேர்த்தி முறைகளும் மற்றும் போர்டியாக்ஸ் கலவை பயன்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளித்தனர். மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.




# பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டை நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



விருதுநகர், மார்ச் 12

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள கோபாலபுரத்தில் கிராம மக்களுடன் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டை நம்மாழ்வார் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சியினை முதன்மையாகக் கொண்டு செய்தனர்.

கிராமப்புற மதிப்பீட்டில் உள்ளூர் பிரச்சினைகள் மற்றும் முதன்மையானவற்றைப் புரிந்து கொள்ள காலக்கோடு, டிரான்செக்ட் நடை, வென் வரைபடம், பிரச்சினை மரம் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தி மேலும் தகவலறிந்த வளர்ச்சித் திட்டமிடலை செயல்படுத்தினர்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# விவசாயிகளுக்கான தனித்துவமான அடையாள எண் பதிவு செய்து பெற அரியலூர் வேளாண்மை இணை இயக்குநர் அழைப்பு



நேற்று அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் நில உடமை பதிவு செய்வதை பார்வையிட்டார்.

அரியலூர், மாரச் 12

பயிர் கடன், பயிர் காப்பீடு, பயிர் நிவாரணம் வேளாண் மற்றும் இதர சகோதர துறை திட்டங்கள் பெற பொது சேவை மையயங் களில் விவசாயிகள் இலவச மாக 31.03.25 வரை தனித்துவ அடையாள எண் பதிவு செய்து பெறலாம். விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற பொது சேவை மையங்களில் இலவசமாக பதிவு செய்யலாம் என அரியலூர் வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

## தனித்துவ அடையாள எண்

மத்திய அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை வேளாண் அடுக்ககம் மூலம் நில உடைமைகளை உள்ளடக்கிய விவசாயிகளின் தரவுகளை சேகரிப்பதற்கு பிரத்யேகமான விவசாயிகள் பதிவேடு செயலியை உருவாக்கியுள்ளது.

இச்செயலி மூலம் விவசாயிகளின் நில உடைமைகளை சரிபார்த்து ஆதார் எண்ணை போன்று விவசாயிகளுக்கென தனித்துவமான அடையாள எண் வழங்கும் சிறப்பு முகாம் அரியலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமங் களிலும் நடைபெற்று வருகிறது.

இந்த முகாமில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகத் துறை சார்ந்த கள அலுவலர்கள் மகளிர் திட்ட சமுதாய வள பயிற்றுனர்கள், இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள், கல்லூரி மாணவர்கள் கிராமங்களுக்கு வருகை தந்து விவசாயிகளுக்கான தனித்துவமான அடையாள எண் வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

**இலவசமாக**

அரியலூர் மாவட்டத்தில் மொத்தம் 1,32,231 விவசாயிகள் உள்ளனர். பிரதம மந்திரி கௌரவ நிதியுதவி திட்டத்தின் கீழ் 69,026 விவசாயிகள் பயன் பெற்று வருகின்றனர். இதில் விவசாயிகள் பதிவேடு திட்டத்தில் இதுவரை பிரதம மந்திரி கௌரவ நிதியுதவி திட்டத்தின் கீழ் 28,796 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இன்னும் பிரதம மந்திரி கௌரவ நிதியுதவி திட்டத்தின் கீழ் பயன் பெறும் 40,230 விவசாயிகள் பதிவு செய்யவில்லை. இம்மாவட்டத்தில் மொத்தம் இதுவரை 53,370 விவசாயிகள் மட்டுமே பதிவு செய்துள்ளார்கள். எனவே, இம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் உடனடியாக தங்கள் நில உடைமை விவரங்களை பதிவேற்றம் செய்து, விவசாயிகளுக்கான தனித்துவமான அடையாள எண் பெற வேண்டியது அவசியமாக உள்ளது.

விவசாயிகள் அவர்களின் சொந்த கிராமங்களில் வசிக்கும் பட்சத்தில் கிராம ஊராட்சி அலுவலகங்கள், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகங்கள், வேளாண்மை உதவி இயக்குநர்



அலுவலகங்கள் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் விவசாயிகளின் நில உடைமை விவரம் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

தற்போது அரியலூர் மாவட்ட விவசாயிகள் அவர்களின் சொந்த கிராமங்களை விட்டு வேறு எந்த பகுதியில் இருந்தாலும் அருகில் உள்ள அனைத்து பொது சேவை மையங்களில் தங்கள் நில உடைமைகளை இலவசமாக பதிவு செய்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து விவசாயிகளும் தங்கள் அருகில் உள்ள பொது சேவை மையத்தை பயன்படுத்தி தங்களுடைய பட்டா, கூட்டு பட்டா, ஆதார் அட்டை, அலைபேசி கொண்டு சென்று பதிவு செய்து இந்த அரிய வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளலாம்.

மேலும், இச்செயலி மூலம் விவசாயிகளின் நில உடைமைகள் மற்றும் இதர விவரங்களை விவசாயிகள் முன்னிலையில் சரிபார்த்து விவசாயிகளின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு அடையாள எண் வழங்கப்படும். இவ்வாறு பதிவு செய்து பெறப்படும் தனித்துவ விவசாயி அடையாள எண் மூலம் இனிவரும் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பயன்களை ஒற்றை சாளர முறையில் விவசாயிகள் பெறலாம். பயிர் கடன், பயிர் காப்பீடு, பயிர் நிவாரணம் வேளாண் மற்றும் இதர சகோதர துறை திட்டங்கள் பெற இந்த அடையாள எண் மிக முக்கியம்.

**மானிய திட்டங்கள்**

விவசாயிகள் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம், கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு, வருவாய் உள்ளிட்ட 24 துறைகளின் மானியத் திட்டங்களை எளிதில் பெறலாம். மேற்கண்ட துறைகளின் திட்ட பலன்களை பெறுவதற்கு ஒவ்வொரு முறையும் விண்ணப்பித்து ஆவணங்கள் சமர்பிக்க வேண்டிய அவசியமில்லை.

எனவே, விவசாயிகள் தங்களுடைய கணினி பட்டா, ஆதார் எண், கைபேசி ஆகியவற்றுடன் அருகில் உள்ள பொது சேவை மையத்தில் வரும் 31-ந்தேதிக்குள் இலவசமாக பதிவு செய்து கொள்ளலாம்.

இந்த தகவலை அரியலூர் வேளாண்மை இணை இயக்குநர் அ.கீதா தெரிவித்துள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கால்நடைகளுக்கு ஏற்ற தீவனம் அசோலா-எப்படி?



தற்போது படிப்படியாக விவசாய நிலங்களும் விவசாய சாகுபடி குறைந்த நிலையில் கால்நடைகளுக்கு குறிப்பாக கறவை மாடுகள், கோழிகளுக்கு பசுந் தீவன பற்றாக்குறையாக ஏற்பட்டு வருகிறது. என்ன தான் கலப்பு தீவனங்கள் கொடுத்தாலும், அந்த வகையில் இரசாயன உரமில்லாத புரத சத்து அதிகமாக உள்ள மாற்று தீவனமாக அசோலா உள்ளது. இது எளிய முறையில் விவசாயிகள் குறுகிய இடத்தில் உற்பத்தி செய்யலாம். அதுமட்டுமல்ல நெல் நடவு பயிருக்கு சிறந்த இயற்கை உரமாக பயன்படுவதுடன் காற்றில் உள்ள நைட்ஜனை கிரகிக்கும் ஆற்றல் இந்த அசோலாவுக்கு உண்டு. ஒரு ஏக்கர் நெல்பயிருக்கு 200 கிலோ வரை இடலாம்.






**அசோலா உற்பத்தி செய்தல் (AZOLLA PRODUCTION)**

இது கிராமப்புறங்களில் மூக்குத்தி, கம்மல் பாசி என்று அழைக்கப்படுகின்றன. இது பெரணி வகையை சேர்ந்த தாவரம். அதிக ஆழமில்லாத நீர் தேங்கும் குட்டைகள் சிமெண்ட் தொட்டிகள், சில்பாலின் சீட் விரிக்கப்பட்ட படுகைகளில் எளிதாக உற்பத்தி செய்யலாம். 10 அடி நீளம் × 2 அடி அகலம் × 1 அடி ஆழம் கொண்ட சிமெண்ட் தொட்டிகளில் 25-30 கிலோ மணல் (போர் மண்) பரப்பி அதனுடன் 5 கிலோ பசுஞ்சாணத்தை கலக்க வேண்டும். சூப்பர் பாஸ்பேட் உரம் இருந்தால் 500 கிராம் கலக்கலாம். நீரின் அளவு 5 செ.மீ இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும்.

அதில் 5 கிலோ அசோலாவை இட்டு பரப்பி விடவேண்டும். இரண்டு வாரங்களில் 40-50 கிலோ வரை அசோலா அறுவடை செய்யலாம். அசோலா வழங்குவதால், கறவை மாடுகளின் பால் உற்பத்தி திறன் 15-20% அதிகரிக்கும். கோழிகளுக்கு வழங்கினால், குறிப்பிட்ட காலத்திற்குள் எடை அதிகரிக்கும்.

முதலில் அசோலா மாடுகள் சாண வாடை அடிப்பதால் எடுத்தவுடனே உண்ணாது. அவற்றை நல்ல தண்ணீரில் அலசி, சிறிதளவு நாட்டு சர்க்கரை கலந்து புரட்டு கொடுத்தால் உண்ண தொடங்கும். ஒரு கிலோ அசோலா மாடுகளுக்கு கொடுத்தால் ஒரு கிலோ பிண்ணாக்கு கொடுப்பதற்கு சமமாகும். இதுவரை 5 லிட்டர் பால் கொடுக்கும் மாடுகள் அசோலா உண்டபின் கூடுதலாக ஒரு லிட்டர் (6) லிட்டர் தருவதுடன் பாலின் தரமும் நன்றாக இருக்கும் என தரவுகள் கூறுகின்றன.

**அசோலா உள்ள சத்துகள்**

இதில் 25-30% புரத சத்தும் கால்நடைகளுக்கு தேவையான 7 அமினோ அமிலங்களும், தாது உப்புகளும் விட்டமின்கள் உள்ளன. இதை பசுந்தீவனமாகவோ அல்லது உலர் தீவன குமாகவோ கொடுக்கலாம். இதனை உட் கொண்ட கோழி முட்டையின் எடை அல்புமின், குளோபுலின் மற்ற முட்டைகளை விட அதிகமாக இருப்பதுடன் நோய் எதிர்ப்பு திறன் உண்டாகும்.

எனவே ஒருங்கிணைந்த பண்ணையத்தில் அனைத்து விவசாயிகளும் அசோலா வளர்க்க முன்வர வேண்டும். குறைந்த செலவில் அதிகமான சத்துகள் உள்ளடக்கிய அசோலாவை தீவனமாக கொடுப்பதால் விவசாயிகளுக்கு ஏகப்பட்ட லாபம் கிடைக்கும். இடம் இல்லாத விவசாயிகள் கூட சில்பாலின் பெட் மூலமாக வளர்க்கலாம். இது தொழிலாகவும் தொடங்கலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக வேளாண் தொழில்முனைவு மையத் திறப்பு விழா



தலைமை விருந்தினர், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் உறுப்பினர் செயலர் முனைவர் ச.வின்சென்ட், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக வேளாண் தொழில் முனைவு மையத்தை திறந்து வைத்தார்

தேனி, மார்ச் 12

தேனி மாவட்டம், காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான அமைப்பு என்ற திட்டத்தின் கீழ் வேளாண் தொழில்முனைவு மையத் திறப்பு விழா இனிதே நடைபெற்றது. திட்ட ஒருங்கிணைப்பாளர் பொ.மகேஸ்வரன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் தலைமை விருந்தினராக தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் உறுப்பினர் செயலர் முனைவர் ச.வின்சென்ட் தலைமையேற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக வேளாண் தொழில் முனைவு மையத்தை திறந்து வைத்தார். மேலும்,தேனி மாவட்டத்தில் உள்ள வளங்கள் குறித்தும் அதை எவ்வாறு விவசாயம் சார்ந்த தொழிலாகவும் எவ்வாறு மதிப்புக்கூட்டுதலாக மாற்றுவது என்று கூறினார். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு திட்டங்கள் குறித்தும் விளக்கினார். இயற்கை விவசா யத்தின் முக்கியத்துவம் குறித்தும் பயிர் கழிவுகள் மற்றும் வீட்டுக் கழிவுகளை எவ்வாறு உரமாக மாற்றலாம் என்பதையும் விளக்கினார். மேலும், விவசாயத்தை விட்டு வெளியேறாமல் விவசாயத்தில் எவ்வாறு வருமானம் பெறலாம் என்பதையும் கூறினார்.

இந்நிகழ்வில் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் சேர்மன் முனைவர் பெ.பச்சைமால் கலந்து கொண்டு முதன்மையுரை ஆற்றினார்.

அவரின் உரையில் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், தொழில் முனைவோருக்கு செயல்படுத்தப்படும் முன்னோடி நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு அரசின் தாட்கோ மேலாளர் க.சரளா கலந்து கொண்டு தாட்கோ மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் வேளாண் சார்ந்த தொழில் முனைவோருக்கான மானியங்கள் குறித்தும் விளக்கினார். மாவட்ட தொழில் மையத்தின் உதவி இயக்குநர் கா.மோகன்ராஜ் கலந்து கொண்டு மாவட்ட தொழில் மையத்தின் மூலம் வழங்கப்படும் மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் குறித்து விளக்கினார். தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பிரிவின் ஒருங் கிணைப்பாளர் முனைவர் வே.செந்தில்குமார் சிறப்புரையாற்றி னார். மேலும், ஹிரியானா மாநிலத்தை சேர்ந்த பல்வகை உணவுப்பதப்படுத்தும் இயந்திரக் அடிமட்ட கண்டுபிடிப்பாளர் பிரின்ஸ் கலந்து கொண்டு பல்பொருள் உணவு தயாரிக்கும் இயந்திரம் பற்றிய வெற்றிக் கதையை விளக்கினார்.

சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் துணை இயக்குநர் மருத்துவர் ப.சிவராம் கலந்து கொண்டு விவசாய பெண்கள் மற்றும் பெண் தொழில்முனைவோருக்கான திட்டங்கள் குறித்தும் அவர்கள் அன்றாடம் கடைபிடிக்க வேண்டிய உணவு முறைகள் குறித்தும் விளக்கினார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக மலைப்பயிர்கள், காய்கறிகள் மற்றும் பழங்களில் மதிப்புக்கூட்டல் தொழில்நுட்ப பயிற்சி கையேடு வெளியிடப்பட்டது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் மரக்கன்று நடப்பட்டது. வேளாண் அறிவியல் மையத்தின் மூலமாக உருவாக்கப்பட்ட தொழில்முனைவோர்கள் தங்கள் பொருட்களை காட்சிப் படுத்தினார்கள்.

சிறப்பு விருந்தினர்கள், விவசாயிகள், பெரியகுளம் தோட்டக் கலை கல்லூரி மாணவர்கள், தொழில் முனைவோர்கள் உருவாக்கிய பொருட்களை பார்வையிட்டு கலந்துரை யாடினார்கள்.

இறுதியில் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்ய-ாசிவசெல்வி நன்றியுரை ஆற்றினார்.

# அலங்காநல்லூர் வட்டாரத்தில் மாதிரி கிராமத்தில் விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி



மதுரை, மார்ச் 12

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்பில் தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமய மாக்கல் திட்டத்தின் கீழ் (TNI-AMP-PHASE-IV) 2024-2025ம் ஆண்டு சாத்தையாறு உபவடி நிலப்பகுதியில் கீழ்க்கண்ட கிராமங்களான கல்லணை, அழகாபுரி, ஊர்சேரி மாதிரி கிராமங்களாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. 12.03.25ம் தேதி அன்று ஊர்சேரி கிராமத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் 25 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.




மேலும் அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன், பயிற்சியில் அலங்காநல்லூர் பகுதியில் விவசாயிகளின் தரவுகள் சரிபார்க்கும் பணி மேற் கொள்வதாக தெரிவித்தார். வேளாண்மைத்துறை, இதரத் துறைகளின் அலுவலர்கள் மற்றும் சமுதாய வள பயிற்றுநர் மூலம் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த அனைத்து மத்திய மாநில அரசு திட்டங்களின் பயன்களை எளிமையாகவும் விரைவாகவும் விவசாய பெருங்குடி மக்கள் பெற்றிட ஏதுவாக விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதில் ஒரு அங்கமாக விவசாயிகளின் நில உடமைகளை சரி பார்த்து நில உரிமையாளர்களிடம் ஒப்புதல் பெற்று பதிவு செய்ய அனைத்து வருவாய் கிராமங்களிலும் ஊராட்சி அலுவலகங்கள்,

கிராம நிர்வாக அலுவலகம், சமுதாய வள பயிற்றுநர் மைய கட்டிடங்களில் முகாம் நடைபெற்று வருகிறது. பட்டாதாரர்கள் அனைவரும் தங்களின் நில உடைமை சிட்டா, ஆதார் அட்டை, ஆதார் இணைக்கப்பட்ட கைபேசியுடன் முகாமில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும். மேலும் தகவல் பெற உங்கள் பகுதியில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம் விற்பனைத்துறை உதவி அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன் கேட்டுக்கொண்டார்.

வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் மானிய திட்டங்கள் மற்றும் இடுபொருட்கள் இருப்பு குறித்தும் வாங்கி பயன் பெறுமாறு விவசாயிகளை துணை வேளாண்மை அலுவலர் மு.பாலாமணி கேட்டுக்கொண்டார். தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் விற்பனைத்துறை மூலம் வழங்கப்படும் மானிய திட்டங்கள் வாங்கி பயன் பெறுமாறு விவசாயிகளை உதவி தோட்டக்கலை அலுவலர் ஜெயக்குமார், உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) ராஜ்குமார் ஆகியோர் கேட்டுக்கொண்டனர்.




மேலும் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவ திட்டத்தில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறினார்கள். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு உதவி வேளாண்மை அலுவலர் ஈஸ்வரன் தொழில் நுட்ப உரையாற்றினார். மேலும் கலந்து கொண்ட விவசாயி களுக்கும் அலுவலர்களுக்கும் உதவி வேளாண்மை அலுவலர் காதர்மொகைதீன் நன்றி தெரிவித்தார்.

திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா தொழில்நுட்ப அலுவலர்கள் வேல்முருகன், சௌந்தராஜன், வசந்தி ஆகியோர் மேற்கொண்டனர்.

# பயிருக்கு மணிச்சத்து மற்றும் துத்தநாகச்சத்து கிடைப்பதில் மைக்கோரைசாவின் பங்கு

- பாஸ்பரஸ் மண்ணில் வேரை நோக்கி ஒரு நாளுக்கு 1-2 மில்லி மீட்டர் மட்டுமே நகரக்கூடியது.

- அவ்வாறு வேரை நோக்கி செல்லும் முன்னரே 80 சத பாஸ்பரஸ் மண்ணில் நிலைப்படுத்தப்பட்டு விடுவதால், பயிருக்கு மிகக் குறைந்த அளவில் மட்டுமே பாஸ்பரஸ் கிடைக்கும்.

- மைக்கோரைசா இடுவதால் வேர் வளர்ச்சி அதிகரிப்பதுடன், வேரின் பரப்பில் உருவாகும் பூஞ்சாண இழையின் மூலம் அதிக அளவு மண்ணிலிருந்து ஊட்டச்சத்துக்களை உட்கிரகிக்க முடிகிறது.

- 1 கன செ.மீ மண்ணில் மைக்கோரைசா பூஞ்சாண இழைகள் 40 சதுர மீட்டர் வரை பரவுவதால் அதிக அளவு மண்ணிலிருந்து ஊட்டச்சத்துக்களை உட்கிரகிக்க முடிகிறது.

- மண்ணில் இடும் பாஸ்பரஸ் உரத்தில் 20-25 சதம் மட்டுமே பயிர் எடுத்துக் கொள்ள முடியும்.

- மீதம் 75 சத பாஸ்பரஸ் உரம் மண்ணில் நிலைப் படுத்தப்பட்டு விடும். மைக்கோரைசா இடுவதால் பாஸ்பரஸ் பயன்படும் வீதத்தை 20லிருந்து 40 சதம் வரை அதிகரிக்கலாம்.

- இதன்மூலம் பயிருக்கு இடும் மணிச்சத்தின் அளவில் 20-40 சதம் வரை குறைக்கலாம்.

- நுண்ணூட்டங்களில் குறிப்பாக, துத்தநாகத்தை பயிர் களுக்கு அதிக அளவில் மைக்கோரைசா அளிக்கவல்லது.

- மண்ணில் துத்தநாகம் அதிக அளவில் காணப்பட்டாலும், 90 சத துத்தநாகம் பயிர்களுக்கு கிடைக்காத நிலையிலேயே காணப்படுகிறது.

- எனவே பயிருக்குத் தேவையான துத்தநாகத்தை, துத்த நாக சல்பேட் உரம் மூலம் அளிக்க வேண்டியது அவசியமாகிறது.

- துத்தநாக சல்பேட் உரத்தின் பயன்படும் வீதம் அதிகபட்ச மாக 5 சதம் இருப்பதால், 95 சத துத்தநாகம் பயிருக்கு கிடைக்காமல் விரயமாகிறது.

● இச்சூழ்நிலையில் மைக்கோரைசா இடுவதன் மூலம் பயிர்களை துத்தநாகக் குறைபாட்டிலிருந்து பாதுகாக்கலாம்.

● மைக்கோரைசா இட்ட பயிர்களில் பயிருக்குத் தேவையான துத்தநாகத்தில் 30-50 சதம் வரை பூஞ்சாண இழையின் மூலம் கிடைக்கிறது.

● பூஞ்சாண இழை வேரை ஒட்டி மட்டுமல்லாது அதிக தூரம் பரவி வளருவதால் அதிக அளவு மண்ணிலிருந்து துத்த நாகத்தை உட்கிரகித்து பயிருக்கு அளிக்கிறது.

● பயிர்களை பாஸ்பரஸ் மற்றும் துத்தநாகக் குறைபாட்டி லிருந்து பாதுகாக்க நமக்கு கிடைத்திருக்கும் வரப்பிரசாதம் மைக்கோரைசா ஆகும்.

● எனவே மண்வளம் பெருகி மகசூல் அதிகரிக்க மைக்கோரைசா வேர் உட்பூஞ்சாணம் இடுதல் அவசியம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கூறியுள்ளார்.

# அங்கக வேளாண்மை குறித்து கலந்துரையாடி வேளாண் கல்லூரி மாணவர்கள்




பெரம்பலூர், மார்ச் 12

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், நக்க செலம் அடுத்த குரூரில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம், ATMA மற்றும் வேளாண் இறுதியாண்டு மாணவர்கள் இணைந்து நடத்திய விவசாயிகளுக்கான அங்கக வேளாண்மை பயிற்சி நடைபெற்றது. இதில் பொதுமக்கள், விவசாயிகள், வேளாண் உதவி இயக்குனர், வேளாண் அலுவலர் மற்றும் தனலெட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம் சார்ந்த வேளாண் இறுதியாண்டு மாணவர்கள் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலில் அங்கக வேளாண்மை சார்ந்த பல புதுமை சிந்தனைகளும், புதுமை கருத்துக்களும் வரவேற்கப்பட்டன.

# வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் விவசாயிகளுக்கு கண்டுணர்வு சுற்றுலா




கிருஷ்ணகிரி, மார்ச் 12

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் வேப்பனப்பள்ளி வட்டார பகுதி விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தலைமையில் இயற்கை விவசாயம் என்ற தலைப்பில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் ஏத்தாபூர் இடத்திற்கு உள் மாநிலவிவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலாவிற்கு 50 விவசாயிகளை அழைத்து செல்லப்பட்டது.

இப்பயிற்சியில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் ஏத்தாபூர் ஆறுசெந்தில் மற்றும் வீரமணி பங்கேற்று




இந்த ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஒய்.ஆர்.சி.எச்.1 என்ற வீரிய ஒட்டு ஆமணக்கு 2009ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. குறைவான வயது உடையதால் மானாவாரிக்கும், பாசனநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கும் மிகவும் ஏற்றது. 150-180 நாட்கள் வயது உடையது. அதிக கிளைப்பு, நடுத்தர உயரம், அதிக விளைச்சல், காய் குலைகளில் பெண் பூக்களின் அளவு 95 சதவீதத்திற்கு மேல் இருக்கும். செடிகள் சாயாத, காய்கள் வெடிக்காத தன்மையைக் கொண்ட, அதிக உரமேற்கும் திறனும் கொண்டவை. குறுகிய கால இடைவெளியில் அதிக குலைகள் (40-50) ஒரு செடிக்கு வைக்கும் பண்புடையது.

செடியின் உயரமும் கிளைகளின் நீளமும் குறைவாக உள்ளதால் ஊடுபயிர் சாகுபடிக்கு ஏற்றது. குறைவான வயதுடைய காரணத்தினால் தமிழகத்தில் ஆடிப் பட்டத்தில் சாகுபடி செய்யும்போது காய் அழுகல் நோய் தாக்குதல் குறைவாக உள்ளது. குறைவான பச்சை தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈ தாக்குதல், காய்ப்புழுவுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது.

நல்ல வடிகால் வசதியுடன் கூடிய கார, அமிலத்தன்மையற்ற வண்டல், செம்மண் நிலங்கள் மிகவும் உகந்தவை. வெப்பநிலை அதிகமானால் ஆண் பூக்கள் அதிகம் தோன்றி விளைச்சல் குறையும். நீர் தேங்கி நிற்கும் நிலத்தில் பயிர் செய்வதை தவிர்க்க வேண்டும்.

மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாபூர், வேல்முருகன் பங்கேற்று மரவள்ளி சாகுபடியில் மற்ற பயிர்களை விட பராமரிப்பு செலவு குறைவு. அதே நேரத்தில் அதிக லாபம் கிடைக்கும்.




தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிமுகம் செய்த ஏத்தாப்பூர் 1 என்ற மரவள்ளிக் கிழங்கைமாவுப்பூச்சி உள்ளிட்ட சில வகை பூச்சிகளின் தாக்குதல் மரவள்ளியில் இருக்கும். எனினும் அவற்றை எளிமையான முறைகளில் கட்டுப்படுத்தி விடலாம். இறவைப் பாசனம் எனில் கார்த்திகை, மார்கழி மாதங்களிலும், மானாவரிப் பாசனம் எனில் சித்திரை, வைகாசி மாதங்களிலும் ஏத்தாப்பூர் 1 மரவள்ளி நடவு செய்யலாம். 10-வது மாதத்தில் மரவள்ளிக் கிழங்கு அறுவடைக்கு வந்துவிடும்.

ஜவ்வரிசி, சேமியா, நூடுல்ஸ் போன்ற உணவுப் பொருள் களுக்கான மூலப்பொருளாக மரவள்ளிக் கிழங்கு திகழ்கிறது.

கலந்து கொண்ட விவசாயிகளுக்கு அக்ரிஸ்டாக் விவசாயி களுக்கான தனித்துவமான அடையாள எண் மூலம் கிடைக்கப் பெறும் நன்மைகள் பற்றி தெளிவாக கூறப்பட்டது.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.